

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.11.2023) முகாம் அலுவலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

### உச்சநீதிமன்ற வளாகத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு!

# நீதி - சமத்துவம் - மக்களாட்சி மாண்புகளின் அடையாளச் சின்னம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைத் தளப் பதிவு!

சென்னை, நவ. 28 -

உச்சநீதிமன்ற வளாகத்தில் அன்னைஇந்தியாவின்சுவரோவியமும், அண்ணல் காந்தியின் சிலையும் மட்டுமே நிறுவப்பட்டுள்ளன. இந்நிலையில் உச்ச நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலையை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதனைத் தொடர்ந்து தலைமை நீதிபதி சந்திரசூட்டின் முயற்சியின் பேரில், உச்சநீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலையை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அம்பேத்கரின் சிலை, வழக்கறிஞர் உடையில், 3 அடி, அடித்தளத்தில் 7 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சிலையைச் சிற்பி நரேஷ் குமாவத் உருவாக்கியுள்ளார்.



இந்நிலையில், உச்ச நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலையை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், ஒன்றிய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் அம்பேத்கர் சிலை திறப்பு குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

**உச்சநீதிமன்ற வளாகத்தில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களது சிலை திறக்கப்படும் இந்தச் சிறப்புமிகு அரசமைப்புச் சட்டநாளில், நமது அரசமைப்புச் சட்டத்தின் நிலைத்த மதிநுட்பத்தைப் போற்றுவோம்!**

**அரசமைப்புச் சட்டத்தின் உயர்பண்புகளை நீதித்துறையில் காப்பதற்காக அயராது பாடுபடும் நீதியின் பாதுகாவலர்களுக்கு நமது நெஞ்சார்ந்த வணக்கத்தைச் செலுத்துவோம். அண்ணல் அம்பேத்கருக்குச் சிலை வடிவிலான புகழ்வணக்கம் என்பது வெறும் நினைவுகூர்தல் அல்ல, அது அவர் வகுத்தளித்த நீதி, சமத்துவம் மற்றும் மக்களாட்சி மாண்புகளின் மீது நாம் கொண்டுள்ள பற்றுறுதியின் அடையாளச் சின்னம் ஆகும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகவலைத் தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி நகரக் கழகச் செயலாளர் எஸ்.கே.நவாப், கிருஷ்ணகிரி நகர மன்றத் தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.பரிதா நவாப் ஆகியோரால் நிறுவப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலை திறப்பு விழா கிருஷ்ணகிரி கலைஞர் மேம்பாலம் அருகே நடைபெற்றது. விழாவில் கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை தாங்கினார். கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.காந்தி, எஸ்.எஸ்.சிவசங்கர், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம், எம்.வி.வெற்றிச்செல்வன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.


